செ.வெ. எண்.  16                                                                        நாள்:  09.04.2019

**மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டிட புதிய வளாகத்தில், சமரச மையம் / சமரச விழிப்புணர்வு முகாமை மாவட்ட முதன்மை நீதிபதி திருமதி. மீனா சத்தீஷ் அவர்கள் இன்று ( 09.04.2019) துவக்கி வைத்து சமரச மைய மீடியேட்டர்களுக்கு பேட்ச் களை வழங்கினார்.**

**நிலுவையில் உள்ள நீண்ட கால வழக்குகளுக்கு சமரச மையத்தின் மூலம் தீர்வு காண வழக்காடிகள் மற்றும் பொதுமக்கள் முன்வரவேண்டும்.**

**மாவட்ட முதன்மை நீதிபதி திருமதி. மீனா சத்தீஷ் அவர்கள் வேண்டுகோள்.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டிட புதிய வளாகத்தில், சமரச மையம் / சமரச விழிப்புணர்வு முகாமை மாவட்ட முதன்மை நீதிபதி திருமதி. மீனா சத்தீஷ் அவர்கள் இன்று ( 09.04.2019) துவக்கி வைத்து சமரச மைய மீடியேட்டர்களுக்கு பேட்ச் களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் மக்கள் நீதிமன்ற தலைவர் திருமதி.அறிவொளி அனைவரையும் வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் எஸ்.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பண்டி கங்காதர் இ.கா.ப., முன்னிலை வகித்தனர்.

**பின்பு மாவட்ட முதன்மை நீதிபதி அவர்கள் பேசும் பொழுது:**

மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின்படி 14 - வது சமரச தினம் கடைபிடிக்கப்படுகிறது, இந்த முகாம் குறித்து மக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். நீதிமன்றத்தில் உள்ள நீண்ட கால வழக்குகளுக்கு இதன் மூலம் தீர்வு காண இயலும். லோக் அதாலத் எனப்படும் மக்கள் நீதிமன்றத்தில் நீதிபதிகள் இருப்பார்கள். ஆனால் சமரச மையத்தில் பயிற்சி பெற்ற வழக்கறிஞர்கள் இருந்த இரு தரப்பினரையும் அழைத்து பேசி தீர்வு காண்பார்கள். இதில் இரு தரப்பிலும் யாரையும் புண்படுத்தாத வகையில் பேசக்கூடாது, எதிரான கருத்துகளை கூறக்கூடாது என்றெல்லாம் பயிற்சியின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல ஆண்டுகளாக நிலுவையில் இருக்க கூடிய வழக்குகளுக்கு இந்த சமரச மையம் மூலம் தீர்வு காண முடியும்.

மேலும் சமரச மையம் குறித்து வழக்கறிஞர்கள் வழக்காடிகளிடமும் மற்றும் பொதுமக்களிடையே போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு இந்த சமரச மையத்தின் மூலம் தீர்வு காண பொதுமக்கள் முன்வரவேண்டும். இந்த சமரச மையத்தின் மூலம் வழக்கறிஞர்கள் மற்றும் வழக்காடிகள் அதிக வழக்குகளுக்கு தீர்வு காண முன் வரவேண்டும். என மாவட்ட முதன்மை நீதிபதி திருமதி.மீனா சத்தீஸ் அவர்கள் உரையாற்றினார்.

**நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் எஸ்.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் பேசும் பொழுது:**

சமரச மையம் குறித்து பொதுமக்களிடையே இன்னும் அதிக அளவில் சென்றடைய வேண்டும். இதற்கு பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியளர்கள் பொதுமக்களிடையே போதிய விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும். நீதிதுறையின் மூலமாக வழக்குகளுக்கு தீர்வு காண இது போன்ற சமரச மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்களின் பிரச்சனைகளுக்கு இந்த சமரச மையத்தின் மூலமாக தீர்வு காண முடியும். எனவே பொதுமக்கள் இந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தேர்தலுக்கு பிறகு அரசு அலுவலர்களுக்கும் இந்த சமரச மையத்தின் மூலம் பயிற்சி வழங்க மாவட்ட நிர்வாகம் முழு ஒத்துழைப்பு வழங்கும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் சமரச தீர்வு குறித்து துண்டு பிரசுரங்களை மாவட்ட முதன்மை நீதிபதி திருமதி.மீனா சத்தீஸ் அவர்கள் வெளியிட மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் எஸ்.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பண்டி கங்காதர் இ.கா.ப. ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

நிகழ்ச்சியில் குடும்ப நல நீதிபதி திருமதி.கலாவதி , மகளிர் விரைவு நீதிமன்ற நீதிபதி செல்வி.அன்புசெல்வி, சார்பு நீதிபதிகள். ராமகிருஷ்ணன், திருமதி.லீலா, நீதிதுறை நடுவர்கள் திரு.ஜெயபிரகாஷ், திரு.சுல்தான், கிருஷ்ணகிரி வழக்கறிஞர் சங்க தலைவர் திரு.அசோக் ஆனந், மற்றும் வழக்கறிஞர்கள், வழக்காடிகள், பொதுமக்கள் கலந்துக்கொண்டனர். நிறைவில் மாவட்ட சார்பு நீதிபதி. திருமதி.தஸ்னீம் அவர்கள் நன்றி கூறினார்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.